DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

STC No. 703/2022 Crime No. 120/2022 Station: BHAVANI

| | | | |
|---|---|---|---|
| Name | PW3- திருமதி.கலைச்செல்வி | Caste | |
| Husband Name | தங்கமுத்து | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | 55 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 11.07.2023 |

**எதிரி சந்திரா ஆஜர்.**

**முதல் விசாரணை-**

1) நான் தற்போது பவானி, உரிமையியல் நீதிமன்றத்தில் பெஞ்ச் கிளார்க்காக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 03.03.2021ம் தேதியில் இருந்து மேற்படி நீதிமன்றத்தில் பணியிலிருந்து வருகிறேன். O.S.No.147/2013 என்ற வழக்கானது குமரவேல் என்பவர் பாட்டப்பன் என்பவரின் மீது தாக்கல் செய்து, வழக்கு 2014 ம் வருடம் தீர்ப்பப்பளிக்கப்பட்டது. இவ்வழக்கில் தரப்பினராக இல்லாத ஆஜர் எதிரி சந்திரா என்பவர் பல்வேறு மனுக்களை தாக்கல் செய்து அம்மனுக்கள் நீதிபதி அம்மா அவர்களின் பார்வைக்கு கொண்டு செல்லப்பட்டு, Return செய்யப்பட்டது. 21.03.2022 ம் தேதியன்று மேற்படி ஆஜர் எதிரி சந்திரா என்பவர் நீதிமன்ற தலைமை எழுத்தர் அலுவலகத்திற்கு வந்து, எதற்காக நான் போட்ட மனுக்களை Return செய்தாய் என்று ஒருமையில் அவரை மிரட்டும் தோரணையில் தகாத வார்த்தைகளால் பேசினார். சத்தம் கேட்டு அருகிலிருந்த நானும், மற்ற நீதிமன்ற ஊழியர்களும், வழக்கறிஞர்களும் பார்த்தோம். அதற்கு தலைமை எழுத்தர், எதற்காக இவ்வாறு சத்தம் போடுகிறீர்கள் என கேட்டார். பிறகு எதிரி சந்திரா என்னிடம் வந்து, எந்த பிரிவின் கீழ் நான் தாக்கல் செய்யும் மனுக்களை Return போடுகிறீர்கள் என கேட்டார், எவ்வாறு மனுக்களை தாக்கல் செய்யவேண்டும் என்று என்னையும் மிரட்டும் தோரணையில் கேட்டார்.

2) பிறகு தலைமை எழுத்தர், நீதிமன்ற பணியிலிருந்த SSI திரு.குமரேசன் என்பவரிடம் வாய்மொழியாக புகார் அளித்தார். அதற்கு எதிரி சந்திரா, நீங்கள் யார் உங்களிடம் நான் சொல்லவேண்டியது என்ன இருக்கிறது என்று SSI அவர்களிடம் கேட்டார். அதற்கு SSI அவர்கள், நீதிமன்ற பணி நேரத்தில் இவ்வாறு ஊழியர்களை பணி செய்யவிடாமல் அவர்களது பணிக்கு இடையூறு ஏற்படும் வகையில் பேசக்கூடாது என கூறினார். பிறகு 23.03.2022 அன்று மீண்டும் நீதிமன்ற அலுவலகம் வந்த எதிரி சந்திரா, தலைமை எழுத்தரிடம் திருப்பப்பட்ட மனுக்களை கொடுங்கள் என்று கேட்டார். அப்போதும் எதிரி, எதற்காக Return போடுகிறீர்கள், நீதிபதி அம்மாவிற்கு இதுவெல்லாம் தெரியாதா, எப்படி Return போடலாம் என்று எனக்கு தெரிந்து ஆகவேண்டும் என்று மிரட்டும் தோரணையில் தலைமை எழுத்தரை பேசி சந்திரா, தலைமை எழுத்தரை தகாத வார்த்தைகளால் திட்டினார். அப்போது தலைமை எழுத்தர், எதிரியை சற்று நேரம் வெளியில் இருங்கள், நான் மனுக்களை பரிசீலித்துவிட்டு சொல்கிறேன் என்றார்.

3) அதற்கு எதிரி, நான் வெளியில் சென்றுவிட்டால் இதிலிருக்கும் பேப்பரை எடுத்துவிடுவீர்கள் என்று தலைமை எழுத்தரிடம் கூறினார். எதிரி, தலைமை எழுத்தரிடம் பேசிவிட்டு, மாடிப்படியில் இறங்கும்போது சத்தம் கேட்டு, திறந்த நீதிமன்றத்தில் இருந்த நீதிபதி அம்மா அவர்களும், மாடிப்படியில் மேலே வந்தார். நீதிபதி அம்மா அவர்கள், எதிரியிடம் எதற்காக இவ்வாறு சத்தம் போடுகிறீர்கள் என்று கேட்டதற்கு, எதிரி எதற்காக எனது மனுக்களை Return செய்கிறீர்கள், அதற்கான காரணம் என்ன என்று நீதிபதி அம்மாவிடமும் சத்தமாக பேசினார். சத்தம் கேட்டு, நீதிமன்ற ஊழியர்களும், வழக்கறிஞர்களும் அங்கு வந்தார்கள். அப்போது நீதிமன்ற பணியிலிருந்த SSI திரு.குமரேசன் அவர்களும் அங்கு வந்தார். அப்போது, நீதிபதி அம்மா அவர்களும், தலைமை எழுத்தரும் பேசி கொண்டிருந்தார்கள். நான் எனது அலுவலக பணியை பார்ப்பதற்காக நீதிமன்ற அலுவலகத்திற்கு வந்துவிட்டேன். போலீசார் என்னை வழக்கு தொடர்பாக விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் எதிரியால் குறுக்கு விசாரணை-**

1) பொதுவாக, நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தால் யார் சீல் போடுவார்கள், யார் நம்பர் செய்வார்கள் என்றால் அலுவலில் இருக்கும் நீதிமன்ற ஊழியர்கள்தான் செய்வார்கள். நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சம்மன் வந்தது, போன வாய்தா தேதியில் வந்தது. கடந்த வாய்தாவில் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்களை விசாரிக்கும்போது, நானும் நீதிமன்ற அறையில் இருந்தேன் என்றால் சரிதான். எதிரி பல மனுக்கள் தாக்கல் செய்தார் என்று கூறி உள்ள நிலையில், என்ன என்ன மனுக்களை தாக்கல் செய்தார் என்று கூறமுடியுமா என்றால் அவர் தாக்கல் செய்த மனுக்கள் எதற்காக தாக்கல் செய்கிறார் என்று புரிந்து கொள்ளமுடியாத அளவில் கோர்வையாக இருக்காது, எனவே, நீதிபதி அம்மா அவர்கள் அதனை Return செய்தார். மனு மற்றும் ஆவணங்கள் தாக்கல் செய்தால் அவற்றில் நீதிமன்ற முத்திரை இடுவது வழக்கம் என்றால் சரிதான். நீதிமன்றத்தில் நான் அமர்ந்திருக்கும் அறை எங்கு உள்ளதென்றால் தலைமை எழுத்தர் அறைக்கு அருகில் உள்ள அறையில் உள்ளது.

2) நான் இருக்கும் அறையில் CCTV கேமரா உள்ளது என்றால் சரிதான். அ.சா.1 என்மீது காவல்நிலையத்தில் புகார் கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எதிரி மீது தாக்கல் செய்த முதல் தகவல் அறிக்கையை நான் பார்க்கவில்லை. என்னை SSI திரு.குமரேசன் அவர்கள் விசாரித்தார், எந்த தேதியில் விசாரித்தார் என்று நியாபகமில்லை. அ.சா.1, புகாரை டைப் செய்ததை நான் பார்த்தேனா என்றால் இல்லை. அ.சா.1ன் அறையில் கம்யூட்டர் இல்லை என்றால் சரிதான். நீதிமன்றத்தில் டைப்ரைட்டர் இல்லை, கணினிதான் உள்ளது. அ.சா.1, காவல்நிலையத்திற்கு புகார் கொடுக்க சென்றதை நான் பார்த்தேனா என்றால் இல்லை. இவ்வழக்கில் தாக்கல் செய்த CCTV பதிவு காட்சிகளை நான் பார்க்கவில்லை. 23.02.2022 அன்று நீதிமன்ற ஊழியர் திரு.ஈஸ்வரன் என்பவருடன் அ.சா.1 சென்றதை நான் பார்த்தேனா என்றால் இல்லை. எதிரி சத்தம் போடுவதை கேட்டு நீதிபதி அம்மா எப்போது வந்தார் என்றால் மதியம் 03.15, 03.30 மணியிருக்கும்.

**மறுவிசாரணை இல்லை.**